வல்வெட்டித்துறை நகரசபை
யாழ்ப்பாண மாவட்டம்

---

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 22 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒகஸ்ட் 30 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வல்வெட்டித்துறை நகரசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

i. நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | | செலவினங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 23இ000இ000 | | | | |
| அதிகரித்துக் கூறல்கள் | | | 02 | 209இ317 | 01 | 34இ489 |

ii. சபைக்கு சொந்தமான 18 எண்ணிக்கையான காணி கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்காமையால் சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் குறைத்து காட்டப்பட்டுள்ளது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-------------------------------------------------------

கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

----------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 202இ500 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.3 இணக்கமின்மைகள்

--------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | |
|---|---|
| நகரசபை கட்டளைச் சட்டம் | |
| அத்தியாயம் 255 பிரிவு 76(1) | அங்கீகாரமற்ற 26 கட்டிடங்கள் தொடர்பாக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் 255 பிரிவு 159(1) | கட்டளைச் சட்டத்திற்கு முரணாக புதிய கட்டிட திறப்பு விழா செலவினம் ரூபா 74,330 சபை நிதியில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது. |
| உள்நாட்டு இறைவரித் திணைக்கள 2002ம் ஆண்டின் 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் | மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 2,600 உள்நாட்டு இறைவரித் திணைக் களத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

2. <u>நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு</u>

2.1 <u>நிதிசார் விளைவுகள்</u>

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 1இ366இ328 விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 951இ768 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

----------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 14இ838 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 8இ797இ211 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

------------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| ை.இறைகளும் வரிகளும் | 790 | 772 | 4இ545 |
| ைை.குத்தகை வாடகைகள் | 2இ495 | 2இ518 | 5 |
| ைைை.அனுமதிப்பத்திரக்கட்டணங்கள் | 484 | 1இ124 | - |
| ைஎ.வேறு வருமானங்கள் | 27இ330 | 26இ670 | 13இ204 |

2.3.2 நீதிமன்ற தண்டப்பணம்

2012, 2013 ம் ஆண்டிற்கான ரூபா 7,095,684 நீதிமன்றத் தண்டப்பணங்கள் நீதவான் நீதிமன்றிலிருந்து அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 முத்திரைத் கட்டணம் ரூபா 6,107,958

2012, 2013ம் ஆண்டுகளில் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் ரூபா 6இ107இ958 வருமானமாகவும் வருமதியாகவும் கணக்கிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.4 ஆதன வரி நிலுவை

i. கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஆதனவரி மீள மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டிருக்காமையால் புதிய கட்டிடங்களுக்கான வீதவரி அறவீடு குறைவாக காணப்படுகின்றது.

ii. மீளாய்வாண்டில் ஆதனவரி அறவீடு ரூபா 654,919 ஆக காணப்படுகின்ற போதும் 9 வட்டாரத்தில் அறவிட வேண்டிய வீதவரி ரூபா 4இ544இ635 ஆக காணப்படுகின்றது. அறவிட வேண்டிய ஆதனவரி நிலுவைகளை அறவிடுவதற்கு ஆக்க பூர்வமான எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

பயன்படுத்தப்படாத பௌதீக வளங்கள்

கடந்த ஒரு வருடமாக சபையின் நான்கு வாகனங்கள் பயன்பாடின்றி காணப்படுகின்றது.

2.5 ஒப்பந்த நிர்வாகம்

2.5.1 முற்றாக கைவிடப்பட்ட செயற்திட்டம்.

மீளாய்வாண்டின் வரவு செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டத்தில் மானாங்கானை காத்தவராயர் கோயில் பொதுக் கிணறுக்கான சுற்றுமதில் அமைத்தல் ரூபா 100,000 வேலைத்திட்டம் முற்றாக கைவிடப்பட்டுள்ளது.

2.5.2 பகுதி நிறைவேற்றப்பட்ட செயற்திட்டம்

---------------------------------------------------------------

மீளாய்வாண்டில் ரூபா 3இ175இ000 பெறுமதியான 6 மூலதன வேலைத்திட்டங்கள் நிதி வருட ஆரம்பத்தில் வேலை ஆரம்பிக்காது நிதியாண்டின் இறுதி காலப்பகுதியில் ஆரம்பத்தன்மையால் கீழே குறிப்பிடப்படும் வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்படாது சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2.5.3 <u>பகுதி நிறைவேற்றி கைவிடப்பட்ட செயற்திட்டம்</u>

i. கடந்த வருடம் ரூபா 400,000 பெறுமதியில் மதிப்பிடப்பட்ட மயிலிறைனை மயான மதிற்சுவர் அமைத்தல் வேலைத் திட்டமானது ரூபா 58,046 செலவு செய்யப்பட்டு ஆரம்ப வேலைத் திட்டம் மேற்கொண்டு கிராம மக்கள் எதிர்ப்பு காரணமாக நிறைவேற்றப்படாதுள்ளது.

ii. வாடி ஒழுங்கை வடிகாலமைப்பு வேலைத்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் வரவு செலவுத்திட்டத்தில் ரூபா 1,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ஆரம்ப வேலைத்திட்டத்திற்கு ரூபா 322,592 செலுத்தப்பட்ட நிலையில் சிவன் கோயில் காணி ஆதினகர்த்தா எதிர்ப்பு தெரிவித்தமையால் இவ் வேலை இடையே நிறுத்தப்பட்டுள்ளது.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகள் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வாகன பயன்பாடு
ii. பாதீடு
iii. வருமான சேகரிப்பு
iv. சில்லறைக் கடனாளிகள்
v. வருமான சேகரிப்பு
vi. சில்லறைக் கடனாளிகள